**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**
**வழக்கு எண்: CC 19 /2025**

**வழக்கு சாட்சி :PW1 (LW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாச்சியம்மாள் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சண்முகம் | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | 90 |
| தாலுக்கா | | பெருமநாடு | | : | |

Solemnly affirmed by Thiru.Veeramanikandan , JA of this Court in
accordance with the provisions of Act X of 1873

**(எதிரி ஆஜர்)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on the day 15th day of July 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Adthar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :-**

1. நான் தற்போது வசித்து வருகிறேன் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் எனது சின்ன மகனாவார். ஆஜர் எதிரியின் வீட்டில் நான் இருந்தபோது அவரது மனைவி என்னை வீட்டை விட்டு போ என்று அடிக்கடி சொல்லிவந்தார். மேலும் ஒரு நாள் ஆஜர் எதிரி குடித்துவிட்டு வந்து அவரும், அவரது மனைவியும் எங்கள் வீட்டில் எப்படி இருக்கலாம் வெளியே போ என்று சொன்னார்கள். அதனால் நான் எனது பெரிய மகன் மாணிக்கம் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் எனது பெரிய மகன் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி குடித்துவிட்டு வந்து வெளியேவாடி என்று சொல்லி திட்டினார். நான் வைத்திருந்த கம்பை பிடிங்கி இழுத்துபோட்டு அடித்ததில் எனக்கு இடுப்பில் பலத்த காயம் ஏற்பட்டது. அதிலிருந்து என்னால் நிற்க முடியவில்லை. (சாட்சியால் எழுந்துநிற்க முடியாத சுழலில் இருந்ததால் நாற்காலியில் அமரவைத்தப்படி சாட்சியம் எடுக்கப்பட்டது) அதில் எனக்கு முதுகெலும்பு உடைந்து இடுப்பு பகுதியிலிருந்து கால் வரை அடிப்பட்டு இருந்தது.

2. காயம்பட்ட என்னை எனது பெரிய மகன் புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். அங்கு நான் இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை

விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் கைரேகை செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**</u>

1. எனக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. எனது கணவரின் சொத்தினை எனது மகன்கள் பங்கு பிரித்து கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது பெரிய மகன் தனியாகவும், எனது சிறிய மகன் தனியாகவும் வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்பு நான் எனது மகன்களுடன் இருந்தேனா அல்லது தனியாக இருந்தேனா என்றால் தனியாக இருந்தேன். நான் தனியாக இருந்த ஷெட்டினை எதிரி ராதாகிருஷ்ணன் தான் போட்டு கொடுத்தார் என்றால் சரிதான்.

2. எனக்கு தனியாக ஷெட்போட்டு வீடு உள்ள நிலையில் எதற்காக நான் எனது பெரிய மகன் வீட்டிற்கு சென்றேன் என்றால் எதிரியின் மனைவி என்னை போ என்று விரட்டியதால் நான் பெரிய மகன் வீட்டிற்கு சென்றேன். எனக்கென்று தனியாக வீடு உள்ளதால், அவ்வாறு எதிரியின் மனைவி என்னை விரட்டவில்லை என்றாலும், பெரிய மகன் மற்றும் பெரிய மருமகள் சொல்லி கொடுத்ததின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. நான் எனது பெரிய மகன் வீட்டிற்கு சென்று எத்தனை நாட்களில் சண்டை ஏற்பட்டதாக சொல்கிறேன் என்றால் அதுப்பற்றி ஞாபகமில்லை. எதிரி என்னை ஏற்கனவே இருந்த வீட்டில் வந்து தங்குமாறு அழைத்தார் என்றால் சரியல்ல, என்னை கெட்ட வார்த்தை சொல்லி அழைத்தார். எனது வயது 90 இருக்கும் என்றால் சரிதான். நான் 10 வருடங்களுக்கு மேல் தனியாக வசித்து வந்தேன் என்றால் என் கணவர் இருக்கும்போது தனியாக வசித்து வந்தோம். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. என் கணவர் இறந்தபின்பும் நான் அந்த வீட்டில் தனியாக வசித்து வந்தேன் என்றால் சரிதான்.

4. எனது பெரிய மகன் என் கணவரின் சொத்தை ஏமாற்றி வாங்குவதற்காக என்னை அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. எதிரி பங்கு பிரித்துவிட்டு வந்து பெரிய மகன் வீட்டில் வந்து வசிக்குமாறு கூறினார் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்திலும், சமயத்திக்கு முன்பும் கம்பினை ஊன்றிதான் நடப்பேன் என்றால் சரிதான். என்னை எதிரி வீட்டிற்கு செல்லலாம் என கம்பினை பிடித்து இழுத்தபோது நான் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரிதான்.

5. நான் மருத்துவமனையில் சேர்ந்தபின்பு எனது உடல்நிலை சரியாகவில்லை என்றால் சரிதான். எதிரி தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்று, பின்பு மணப்பாறை அழைத்து சென்று கட்டு கட்டினார் என்றால் எனது அக்கா சொன்னதால் அழைத்து சென்றார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பெரிய மகன் வீடு என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி என்னை அடிக்கவில்லை என்றாலும், வயதான காரணத்தினால் நான் தடுமாறி கீழே விழுந்த காயத்தை வைத்து எதிரி அடித்ததாக பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

-/ஒம்/-திருமதி.M. சாதத்துணிஷா
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர் .